தலைப்பு:- ஒரு மதம் அல்லது நம்பிக்கையைப் பின்பற்றுவதற்கான சுதந்திரத்திற்கான மன்னிப்பு, பொறுமை மற்றும் நம்பிக்கை போன்ற மனிதாபிமான குணங்கள்.

மனிதா! எங்கிருந்து வந்தது வேற்றுமை
அன்னை வழி அற்பில் நஞ்சில்லை
புனிதா! நானிலம் முழுவதும் ஒற்றுமை
எப்போது என் அம்பகம் காண்பது

பொருள்:- கருவில் குடியிருக்கும் குழந்தைக்கு ஒரு தாய் ஊட்டும் அன்பில் ஒரு போதும் கெட்ட எண்ணங்கள் கலப்பதில்லை. ஆனால், பிறந்து வளர்ந்து ஆளானதும் மனிதர்களுக்கிடையில் மத, இன, மொழி வேற்றுமைகள் எப்படித் தோன்றுகிறது. இவ்வுலகம் முழுவதும் ஒற்றுமை நிறைந்த மனிதர்கள் என்று தோன்றுவார்கள்; இக்கண்கொள்ளாக் காட்சியை நான் எப்போது காண்பேன்.

யாவரும் ஒட்டுநர் என்று வாழ்ந்திடு
அனந்தல் ஒட்டுநோய் நீ நீங்கிடு!
வஞ்சகம் வஞ்சினை மகா பாவமடா
உத்தமம் உரவமென நீ ஏற்றிடு!

பொருள்:- மத வேற்றுமை என்ற தொற்றுநோயிலிருந்து விலகி இங்குள்ள யாவரையும் நீ மனிதாபிமானமுள்ள ஒரு மனிதனாக நண்பனாக்கி வாழ முயற்சி செய்! கொலை, கொள்ளை, சூது, விபச்சாரம், பொய் மற்றும் ஏமாற்றம் போன்ற மகாப் பாவங்கள் துறந்து, நன்மை செய்வது அறிவான செயல் என்று உணர்ந்து கொள்!

அராபதம் என்றென்றும் இன்னாப்பு
அழுகின்ற ஆர்பதங்கள் வேண்டாமே!
காதன்மை என்றென்றும் இதமியம் - என்று,
அகத்து நச்சு உரங்கம் கொன்றிடு!

பொருள்:- நிழல்களில் கூட அழுகைச் சத்தங்கள் இசைப்பொறி (செவி) விழும், துன்பங்கள், துயரங்கள் மற்றும் இழப்புக்கள் நிறைந்த போர்க்களங்கள் இனியும் வேண்டாம். மனதினுள் தங்கியிருந்து நச்சுப் பாம்பைப் போல விஷமுமிழும்

எண்ணங்களைக் கொன்று, அன்புடைமை பாரின் இன்பச்சாவடி என்று, மனிதா! நீ ஏற்றுக்கொள்!

கட்டுறவிக் கூட்டத்து வரிசை போல்
மந்தகாசத்தில் நேயம் வீசிச் செல்!
ஓராட்டுக் கேட்ட ஜீவஒழுகு மாடத்தை
ஆம்புடை யுத்தத்தில் கொல்லாதே!

பொருள்:- கட்டெறும்புக் கூட்டம் இனிப்பைப் பகிர்ந்துண்ணும் ஒற்றுமையின் வரிசை போல், உன்னிடமுள்ள அன்பை பச்சாத்தாபமின்றி புன்சிரிப்பில் பரிமாறு! தந்திரமான மனங்கள் தோற்றுவிக்கும் யுத்தக் களத்தில், தாலாட்டுப் பாட்டால் சீராட்டி வளர்க்கப்பட்ட சக மனிதனின் தேகத்தை பிணமாக்கும் செயல்களில் நீ பணியாற்றக் கூடாது.

எண்ணத்தில் எத்தனை காராகிரகம்
எல்வளி போல வருமா மாற்றம்
மன்னிப்பும் மனிதமும் வேதம் - ஆனால்,
ஜென்மம் கூத்துக்களரி என்றுணர்!

பொருள்:- சாவிகள் தொலைக்கப்பட்ட சிறைச்சாலைகளில் அடைக்கப்பட்டது போல மனிதனின் எண்ணங்களில் எத்தனை பிளவுகள். இப்பிளவுகளைத் தாண்டி இதமான பெருங்காற்று போல வசந்தமாய் மாற்றம் வருமா? நாடக அரங்கைப் போல கதாபாத்திரங்களால் நாம் வகுத்துக் கொண்ட வாழ்க்கை தீங்கிழைத்தவனுக்கு மன்னிப்புக் கொடுப்பதும், தேவைப்படுவோருக்கு நன்மை செய்வதும் மதங்களின் மூச்சென போதிக்கின்றது.

***

## அரும்பதங்கள்

அற்பில் - அன்பில்

நானிலம் - உலகம்

அம்பகம் - கண்

ஒட்டுநேர் - நண்பர்

அனந்தல் - மதம்

ஒட்டுநோய் - தொற்றுநோய்

உத்தமம் - நன்மை

உரவம் - அறிவு

அராபதம் - போர்

இன்னாப்பு - துன்பம்

ஆர்பதங்கள் - நிழல்கள்

காதன்மை - அன்புடைமை

இதமியம் - இன்பம்

உரங்கம் - பாம்பு

கட்டுறவி - கட்டெறும்பு

மந்தகாசத்தில் - புன்சிரிப்பில்

ஓராட்டு - தாலாட்டு

ஒழுகுமாடம் - உடம்பு

ஆம்புடை - தந்திரம்

காராகிரகம் - சிறைச்சாலை

எல்வளி - பெருங்காற்று

கூத்துக்களரி - நாடக அரங்கு

*

முழுப் பெயர்:- முஹம்மது ஹனிபா முஹம்மது ஸர்பான்

வயது:- 24

மின்னஞ்சல்:- sarfansj19548@gmail.com

தே.அ.அ.இல:- 972410063V

தொலைபேசி இல:- 0756795952

கரு:- நுழைவிற்கான ஆக்கத்தை உறுதிப்படுத்தல்

இவ் ஆக்கமானது எந்த ஓர் அச்சு ஊடகத்திலோ மின் ஊடகத்திலோ இதுவரை பதிவாகவில்லை. அத்துடன், “YFORB” அமைப்பினால் நடாத்தப்படுகின்ற வடிவமைப்பு போட்டிற்காக “கவிதை” எனும் பிரிவில் சமர்ப்பிக்கப்படும் இவ் ஆக்கமானது என் சொந்தப் படைப்பு என்பதையும் இதன் வழி உறுதி செய்கிறேன். இதனுடன் இணைக்கப்பட்ட என்னுடைய முழு விவரங்கள் அனைத்தும் உண்மையானவை என்றும் உறுதிப்படுத்திக் கொள்கிறேன்.